# வில்லியம் ஷேக்ஸ்பியரின் “ தவறுகளால் நேர்ந்த கூத்து” நாடகத்தின் தமிழாக்கம் - ஓர் பார்வை.

முனைவர்.சு.ஏஞ்சல் ஜெயலெட் ராணி
உதவிப்பேராசிரியை (தமிழ்),
புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சூசைபுரம், கருங்கல்.

6

**ஆய்வுச் சுருக்கம்**:

இலக்கிய உலகில் நாடகம் என்பது உலகளாவிய நிலையில் இன்றும் செல்வாக்குப் பெற்று திகழ்கின்றது என்பது நாம் கண்கூடாகக் காணும் உண்மை. கூத்து வடிவில் இருந்த ஆரம்பகாலத்தமிழ் நாடகங்கள் காலப்போக்கில் படிப்பதற்குரியவை, நடிப்பதற்குரியவை என வளர்ச்சியடைந்தன. நாடகக் கம்பெனிகள், நாடக சபைகள் போன்றவை தோற்றம் பெற்று இவற்றில் நடித்த நடிகர்களே பின்னர் திரைப்பட நடிகர்களாக மாற்றம் பெற்றனர். “வணிகத்தின் மொழி” என்று உலகில் போற்றப்பெறும் ஆங்கில மொழியிலும் புகழ்மிக்க நாடகங்கள் தோற்றம் பெற்று உலக மக்களை கவர்ந்தன. ஆங்கில இலக்கியம் என்றாலே ஷேக்ஸ்பியரின் நாடகங்களே மக்களிடம் செல்வாக்குப் பெற்றன என்றால் அது மிகையன்று இந்நாடகங்கள் இன்பியல், துன்பியல் என வகைப்படுத்தப்பட்டாலும் அனைத்து நாடகங்களுமே வாசகர்களால் இலக்கிய உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். இந்த வகையில் ஆங்கில எழுத்தாளரான வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதிய ‘ வுhந உழஅநனல ழக நுசசழசள’ என்ற நாடகத்தை தமிழில் ஜே.கே. இராஜசேகரன் காட்சி வாரியாக நாவல் வடிவில் மொழிபெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்பின் அடிப்படையில் வில்லியம் ஷேக்ஸ்பியரின் “தவறுகளால் நேர்ந்த கூத்து (வுhந உழஅநனல ழக நுசசழசள) ஓர் பார்வை என்னும் தலைப்பு ஆய்வின் தலைப்பாக அமைகின்றது.

**திறவுச் சொற்கள்**: (முநலறழசனள)

நாடகம் - ஷேக்ஸ்பியர் - இராஜசேகரன் - தவறுகளால் நேர்ந்த கூத்து.

**முன்னுரை:**

ஆங்கிலக் கவிஞரும் நாடக ஆசிரியருமான வில்லியம் ஷேக்ஸ்பியர் மொத்தம் 37 நாடகங்கள் எழுதி உள்ளார். அவை வரலாறு, துன்பியல், இன்பியல், என மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றது.

பிரிட்டன் வரலாறை மையப்படுத்தி ஷேக்ஸ்பியர் 10 நாடகங்;களைப் படைத்துள்ளார். துன்பியல் வகையிலும் அவர் 10 நாடகங்களை எழுதியிருக்கிறார். பொதுவாக இவை ஆரம்பகால இவை ஆரம்பகால நாடகங்கள், நான்கு பெரும் அவல நாடகங்கள, மூன்று ரோமானிய நாடகங்கள் என்ற மூன்று பிரிவுகளின் கீழ் வருகின்றன. இவை தவிர அவர் 17 இன்பியல் நாடகங்கள், புத்தார்வ இன்பியல் நாடகங்கள், இருண்ட இன்பியல் நாடகங்கள் என மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றது.

ஷேக்ஸ்பியர் காலத்தில் ‘தவறுகளால் நேர்ந்த கூத்து’ பெருமளவில் ரசிக்கப்பட்ட நாடகங்களுள் ஒன்று. இந்நாடகத்தை அடியொற்றியே ஆய்வுத்தலைப்பு அமைகின்றது.

அறிமுகம் (தவறுகளால் நேர்ந்த கூத்து)

இந்நாடகத்தில் ஐந்து அங்கங்களில் பதினொன்று காட்சிகள் வருகின்றன. மொழிபெயர்க்கப்பட்ட நாவலில் இவை பதினொன்று அத்தியாயங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதில்

கதை நடைபெறும் களமாக இத்தாலியில் எஃபிசஸ் நாடு அமைந்துள்ளது.

**நாடகத்தோற்றம்**:

ஷேக்ஸ்பியரின் முப்பத்தேழு நாடகங்களில் மிகமிகச் சிறிய நாடகம் 'தவறுகளால் நேர்ந்த கூத்து' இந்நாடகத்தை உலகின் இரட்டை வேடக்கதை என்று கொள்ள முடியாது. ஏனெனில் இத்தாலியில் இருந்து இந்நாடகத்தின் மூலக்கதையை இவர் இரவல் பெற்றுள்ளார்.

ரோமானிய மூலமே இந்நாடகம் என்றாலும் இன்றைய திரையுலகில் மிகப்பிரபலமாக இருக்கும் இரட்டை வேடக் கதைகளுக்கு ஒருவித அமரத்துவத்தைக் கொடுத்தது ஷேக்ஸ்பியர் என்றே சொல்ல வேண்டும். மொத்தத்தில் திரையுலகிற்கு ஒரு நிரந்தரமான வெற்றிக் கதையைக் கொடுத்த பெருமை அவரது இந்த நாடகத்திற்கும் உண்டு.

ஷேக்ஸ்பியரின் பிற்கால இன்பியல் நாடகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்நாடகம் அதிக அளவில் வார்த்தை ஜாலங்களால் பின்னப்பட்டு வெடிச்சிரிப்புக்குப் பெயர் போனதாக உள்ளது. மேலும் அன்றைய ரசிகர்களால் இந்த நாடகம் பெரிதும் ரசித்துப் பார்க்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**நூலமைப்பு**:

இந்நூலானது பதினொன்று அத்தியாயங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அவை

1. வியாபாரி ஈஜியன் கைது
2. வினோத குழப்பங்கள் ஆரம்பம்
3. அட்ரியானாவின் சந்தேகம்
4. அட்ரியானாவிடம் சிக்கினான் இளையவள்
5. சொந்த வீட்டில் அனுமதி மறுப்பு
6. லூசியானா மீது காதல்
7. மூத்த ஆன்டி ஃபோவஸ் கைது
8. 'அத்தான்' குறித்து அக்காவிடம் புகார்
9. விலைமாதுவிடம் வாக்குவாதம்
10. கணவன் - மனைவி மீண்டும் மோதல்
11. முடிவுக்கு வந்த குழப்பங்கள்

**கதாப்பாத்திரங்கள்**:

ஈஜியன்: இத்தாலியில் சயரெக்யூஸ் நாட்டைச் சேர்ந்த செழிப்பான வியாபாரி.

எமிலியா: ஈஜியனின் மனைவி

சோலினஸ்: எஃபிகஸ் நாட்டின் இளவரசன்

மூத்த ஆன்டி ஃபோவஸ்: ஈஜியன் - எமிலியா தம்பதியின் மூத்த மகன்;; இரட்டைக் குழந்தைகளுள் ஒருவன், எஃபிகஸ் நாட்டுக் குடிமகன்.

இளைய ஆன்டிஃபோலஸ்: ஈஜியன் - எமிலியா தம்பதியின் இரட்டைக்குழந்தைகளுள் இளையவன். சுயரெக்யூஸ் நாட்டின் குடிமகன்.

மூத்த ட்ரோமியோ: ஓர் ஏழைப்பெண்ணின் இரட்டைக்குழந்தைகளுள் மூத்தவன். மூத்த ஆன்டிஃபோலசின் நண்பன். எஃபிகஷ் நாட்டுக்குடிமகன்.

இளைய ட்ரோமியோ: ஏழைப்பெண்ணின் இரட்டைக்குழந்தைகளுள் இளையவன். இளைய ஆன்டிபோலசின் நண்பன். சுயரெக்யூஸ் நாட்டின் குடிமகன்.

அட்ரியானா: மூத்த ஆன்டிஃபோலசின் மனைவி
லூசியானா: அட்ரியானாவின் இளைய சகோதரி
ஆஞ்சலோ: எஃபிகஸ் நாட்டைச் சார்ந்த பொற்கொல்லன்
பல்தசார்: எஃபிசஸ் நாட்டு வணிகன்
பன்ச்: எஃபிகஸ் நாட்டு வைத்தியர்
நெல்: அரியானா வீட்டு சமையல்காரி
ஆதாம்: சிறை அதிகாரி

மேலும் பெயர் சட்டப்படாத விலைமாது, இரண்டு வியாபாரிகள் மற்றும் எஃபிகஸ் நாட்டுக் குடிமக்கள்

**கதைக்கரு**:

ஆள் மாறாட்டத்தால் ஏற்படும் விளைவுகளையும், பெண்ணின் உள்ளார்ந்த அகக்கோட்பாட்டையும், சிக்கல்களை விடுவிக்கும் மனிதனின் போராட்டங்களையும் எடுத்தியம்புவதாக இக்கதை அமைந்துள்ளது.

**கதை**:

இத்தாலியில் சயரெக்யூஸ் நாட்டின் செல்வ வளம் மிக்க ஒரு வியாபாரி ஈஜியன். ஈஜியனின் அழகு வாய்ந்த மனைவி எமிலியா. வியாபார நிமித்தமாக கடல்வழிப் பயணம் மேற்கொள்கிறான் ஈஜியன். கணவனைப் பிரிந்திருக்க மனமில்லாத எமிலியா மோதக்கருவை வயிற்றில் சுமந்தபடி கணவனைத்தேடி அவன் சென்ற இடத்திற்குப் பயணமாகிறாள். கணவனிடம் சென்றடைந்த எமிலியா அங்கேயே தங்கி இரட்டை ஆண் குழந்தைகளைப் பெற்றெடுக்கிறாள்.

அதே இடத்தில் ஓர் ஏழைத் தம்பதியும் இரட்டை ஆண் குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர். பொருளாதாரப் பற்றாக்குறையால் இத்தம்பதிகள் குழந்தைகளை ஈஜியன் - எமிலியா தம்பதிகளிடம் விற்று விடுகின்றனர்.

குழந்தைகள் மீது அளவற்ற அன்பு கொண்ட எமிலியா தன் குழந்தைகளுக்கு மூத்த ஆன்டி ஃபோலஸ் என்றும், இளைய ஆன்டி ஃபோலஸ் என்றும் பெயரிடுகிறாள். வாங்கப்பட்ட குழந்தைகளுக்கு மூத்த ட்ரோமியா - இளைய ட்ரோமியா என்றும் பெயரிடுகின்றனர்.

சில காலம் அங்கே தங்கியிருந்த ஈஜியன் - எமிலியா தம்பதிகள் தங்கள்; நாடான சயரெக்யூஸ் நோக்கி கடல்வழி பயணமாகின்றனர். வரும் வழியில் கடலில் புயல் உருவாகி கப்பல் கவிழும் நிலை உருவாகின்றது. மூத்த ஆன்டி ஃபோலஸ் மற்றும் மூத்த ட்ரோமியா இருவரையும ஒரு மரத்துண்டில் ஒருசேரவைத்துக் கட்டி கடலில் விடுகின்றனர். இளைய ஆன்டிஃபோலஸ் மற்றும் இளைய ட்ரோமியா இருவரையும் மற்றொரு மரத்துண்டில் வைத்துக் கட்டி கடலில் விடுகின்றனர். இரண்டு மரத்துண்டுகளையும் பிடித்தபடி ஈஜியன் - எமிலியாவும் கடலில் மிதந்து செல்கின்றனர். கோரிந்த், எபிடாரிஸ் என்ற இருநகரத்தைச்; சேர்ந்த இரு கப்பல்கள் கடலில் தத்தளித்த இவர்களை நோக்கி வருகின்றன. தம்பதிகள் பிடித்திருந்த மரத்துண்டு இரண்டாக உடைந்தது. மூத்த பிள்ளைகளைக் கட்டியிருந்த மரத்துண்டு எமிலியாவின் பிடியிலும், இளைய பிள்ளைகளைக் கட்டியிருந்த மரத்துண்டு ஈஜியன் கையிலுமாக சிக்கியது. கொரிந்திய கப்பல் எமிலியாவையும் மூத்தகுழந்தைகளையும் மீட்டது. மற்றொரு கப்பல் ஈஜியனையும் இளைய பிள்ளைகளையும் மீட்டது. கணவன் மனைவி இருவருடன் பிள்ளைகளும் இருவேறு திசையில் பிரிந்தனர்.

தன்னுடன் இருந்த பிள்ளைகளுக்கு பதினெட்டு வயதான போது தொலைந்து போன அண்ணன்களைத் தேடி இருவரும் புறப்பட்டனர். கிரேக்கம், ஆசியா ஆகிய நாடுகள் முழுவதிலுமாக

ஐந்து ஆண்டுகள் தேடியும் அவர்களைக் கண்டடைய முடியவில்லை.

சயரெக்யூசைச் சார்ந்த ஈஜியன் எஃபிகஸ் நாட்டுக்குள் தன் உறவுகளைத் தேடி வருகிறான். எஃபிகஸ் நாட்டுக்குள் அத்துமீறி நுழைந்ததாக அந்நாட்டு காவலர்களால் கைதுசெய்யப்பட்டு மன்னன் சோலினஸ் முன் கொண்டு வந்து நிறுத்துகின்றனர். ஈஜியனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. ஆயிரம் மார்க்குகள் அபராதம் செலுத்தினால் மரணதண்டனையிலிருந்து விலக்கு பெறலாம். ஈஜியனின் கதையை அறிந்த மன்னன் எஃபிகஸ் நாட்டில் அவன் இருக்க அனுமதி அளிக்கின்றான். பொருளுதவி செய்யும் எண்ணமுடையவர்களைக் கண்டுபிடித்து அபராதத் தொகையைக் கட்டிவிட்டு உயிர்பிழைக்குமாறு அறிவுறுத்துகிறான் மன்னன்.

ஈஜியன் அபராதத் தொகையைக் கட்டி உயிர் பிழைத்தானா? தன் உறவுகளைக் கண்டடைந்து அவர்களோடு கூடிவாழ்ந்தானா என்பதே மீதி கதை.

தவறுகளால் நேர்ந்த கூத்து – ஓர் பார்வை:

ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களுள் மிகமிகச் சிறிய நாடகம் ‘ தவறுகளால் நேர்ந்த கூத்து’. இரண்டு சேர்ந்த இருகப்பல்கள் கடலில் தத்தளித்த இவர்களை நோக்கி வருகின்றன. தம்பதிகள் பிடித்திருந்த மரத்துண்டு இரண்டாக உடைந்தது. மூத்த பிள்ளைகளைக் கட்டியிருந்த மரத்துண்டு எமிலியாவின் பிடியிலும், இளைய பிள்ளைகளைக் கட்டியிருந்த மரத்துண்டு ஈஜியன் கையிலுமாக சிக்கியது. கொரிந்திய கப்பல் எமிலியாவையும் மூத்தகுழந்தைகளையும் மீட்டது. மற்றொரு கப்பல் ஈஜியனையும் இளைய பிள்ளைகளையும் மீட்டது. கணவன் மனைவி இருவருடன் பிள்ளைகளும் இருவேறு திசையில் பிரிந்தனர்.

தன்னுடன் இருந்த பிள்ளைகளுக்கு பதினெட்டு வயதான போது தொலைந்து போன அண்ணன்களைத் தேடி இருவரும் புறப்பட்டனர். கிரேக்கம், ஆசியா ஆகிய நாடுகள் முழுவதிலுமாக ஐந்து ஆண்டுகள் தேடியும் அவர்களைக் கண்டடைய முடியவில்லை.

சயரெக்யூசைச் சார்ந்த ஈஜியன் எஃபிசஸ் நாட்டுக்குள் தன் உறவுகளைத் தேடி வருகிறான். எஃபிசஸ் நாட்டுக்குள் அத்துமீறி நுழைந்ததாக அந்நாட்டு காவலர்களால் கைதுசெய்யப்பட்டு மன்னன் சோலினஸ் முன் கொண்டு வந்து நிறுத்துகின்றனர். ஈஜியனுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. ஆயிரம் மார்க்குகள் அபராதம் செலுத்தினால் மரணதண்டனையிலிருந்து விலக்கு பெறலாம். ஈஜியனின் கதையை அறிந்த மன்னன் எஃபிசஸ் நாட்டில் அவன் இருக்க அனுமதி அளிக்கின்றான். பொருளுதவி செய்யும் எண்ணமுடையவர்களைக் கண்டுபிடித்து அபராதத் தொகையைக் கட்டி விட்டு உயிர் பிழைக்குமாறு அறிவுறுத்துகிறான் மன்னன்.

ஈஜியன் அபராதத் தொகையைக் கட்டி உயிர் பிழைத்தானா? தன் உறவுகளைக் கண்டடைந்து அவர்களோடு கூடிவாழ்ந்தானா என்பதே மீதி கதை.

தவறுகளால் நேர்ந்த கூத்து – ஓர் பார்வை:

ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களுள் மிகமிகச் சிறிய நாடகம் ‘ தவறுகளால் நேர்ந்த கூத்து’ . இரண்டு இரட்டையர்களின் உருவ ஒற்றுமை காரணமாக உருவாகும் குழப்பங்கள் நகைச்சுவையாக இதில் கூறப்பட்டுள்ளன. இந்நாடகத்துக்கான மூலத்தை ரோமானிய நாடக இன்பியல் நாடக ஆசிரியர் ‘பிளாட்டஸ்’ எழுதிய ‘மெனாக்மி’ என்ற இன்பியல் நாடகத்தில் இருந்து எடுத்துள்ளார். ரோமானிய மூலம் என்றாலும் இன்றைய திரையுலகில் மிகப் பிரபலமாக இருக்கும் இரட்டை வேடக் கதைகளுக்கு ஒரு வித அமரத்துவத்தை கொடுத்தவர் ஷேக்ஸ்பியர் என்றே கொள்ளலாம்.

கப்பல் விபத்து, அதனால் ஒரு குடும்பம் சிதறுண்டு போவது, அன்னிய தேசம் ஒன்றில் கால்

வைத்த மறுகணம் குடும்பத் தலைவன் உயிருக்கு ஆபத்து ஏற்படுவது, அதில் இருந்து தப்பிக்க அவன் வழி தேடுவது எனத் தொடக்கத்தில் கனமான சோகம் இழையோடினாலும் வெகு விரைவில் அவலக் கூறுகள் மறைந்து இது முழுவதுமாக இன்பியல் நாடகமாகிறது. இந்நாடகத்தில் அடங்காப்பிடாரி போன்ற ஒரு மனைவியை அறிமுகம் செய்துள்ளார். பொதுவாக ‘ அடங்காப்பிடாரி மனைவி’ என்பது அன்றைய ஆங்கில இன்பியல் நாடகத்தின் ஒரு முக்கிய அம்சமாகவே இருந்தது எனலாம். மொத்தத்தில் திரையுலகிற்கு ஒரு நிரந்தரமான வெற்றிக் கதையைக் கொடுத்த பெருமை இந்நாடகத்திற்கும் உண்டு.

ஒரே நாளில் ஒரே தளத்தில் நடைபெறும் கதை என்பது இதன் தனிச்சிறப்பு. ஒரே நேரத்தில் இரண்டு இரட்டையர்களை நாடக மேடையில் கொண்டு வர முடியாது என்பதால் அதற்கேற்ப கதை பின்னப்பட்டுள்ளது. எனினும் இறுதிக்காட்சியில் அனைவரும் நேருக்குநேர் சந்திக்கின்றனர்.

தமிழ் திரைப்பட உலகைப் பொறுத்தவரை ஷெக்ஸ்பியரின் ‘அடங்காப்பிடாரியை அடக்குதல்’ நாடகம் எப்படி நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு சிறப்பாக அமைந்ததோ, அதுபோல் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு ‘ தவறுகளால் நேர்ந்த கூத்து’ நாடகம் மிகவும் விருப்பமான கதைக்கருவாக அமைந்தது எனலாம்.

**நிறைவுரை**:

கலை – வர்த்தகம் இரண்டையும் சரியான விகிதத்தில் கலந்து, இந்த உலகில் பெருவெற்றி பெற்ற மனிதர் ஷேக்ஸ்பியரே. ஷேக்ஸ்பியரைப் பொறுத்வரை அவரது செய்திகள் அவரது கதாப்பாத்திரங்கள் வாயிலாக வெளிப்படுகின்றன.

உலகில் காதல், ஆசை, கர்வம், துரோகம், தயக்கம், பகை, நட்பு, சந்தேகம் போன்ற உணர்வுகள் உள்ளவரை ஷேக்ஸ்பியரின் நாடகங்களும் மக்களால் பேசப்பட்டுக்கொண்டே இருக்கும்.

**துணை நூற்பட்டியல்**:

1.ஜே.கே. இராஜசேகரன் - ஷேக்ஸ்பியர் ஓர் அறிமுகம், அவர் பதிப்பகம், சென்னை, 2021.

2. ஜே.கே. இராஜசேகரன் - டைட்டஸ் ஆன்ட்ரானிக்கஸ், அவர் பதிப்பகம், சென்னை, 2021.

3. ஜே.கே. இராஜசேகரன் - தவறுகளால் நேர்ந்த கூத்து, அவர் பதிப்பகம், சென்னை, 2021.

4. பரிதிமாற்கலைஞர் - நாடகவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.